<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>

<u>அ.வ.எண்.214/2019</u>

<u>நாள். 20.07.2026</u>

2026ம் ஆண்டு ஜுலை மாதம் 20.07.2026 ஆம் தேதி என்பவரின் வாக்குமூலம் (1989–ம் ஆண்டு 55வது விதியின் 9வது ஏற்பாட்டின்படி) திரு.S. ராஜீவ்காந்தி உதவியாளர் என்பவரது ஆணையீட்டால் உறுதி கூறப்படுகின்றது. பிரமாணம் செய்யப்படுகிறது.

===============================================================

| | |
|---|---|
| பெயர் = திரு.வனிதா, மண்டல துணை வட்டாட்சியர், மண்ணச்சநல்லூர். | தகப்பனார் பெயர்= திரு. |
| கிராமம் = | தாலுக்கா = |
| தொழில் = | வயது = |

===============================================================

**<u>PW3 மு.வி</u>**

1) நான் தற்போது மண்ணச்சநல்லூர் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். மண்ணச்சநல்லூர் தாலுக்கா மேல்பத்து கிராமம் புல எண்.224/2 தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் மேல்பத்து கிராம நிர்வாக அலுவலக நத்தம் சிட்டா பதிவேட்டின் படி வையாபுரி மனைவி அங்கம்மாள், காளிமுத்து மகன் மணவாளன் ஆகியோர் பெயரில் உள்ளது.

2) மேற்படி மேல்பத்து கிராமம் புல எண்.224/2 தொடர்பான வட்டாட்சியர் அலுவலக ஆவணத்தின் படி யார் பெயரில் உள்ளது என்றால் மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் நில அளவை பிரிவில் பராமரிக்கப்படும் நத்தம் அடங்கல் பதிவேட்டின் படி வையாபுரி மனைவி அங்கம்மாள் பெயரில் உள்ளது. நில அளவை பிரிவு தவிர்த்து, மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் இது தொடர்பாக

தனியாக பதிவேடு ஏதேனும் பராமரிக்கப்படுமா என்றால் இல்லை, கிராம நிர்வாக அலுவலக மற்றும் நில அளவை பிரிவில் மட்டுமே இது தொடர்பாக தனியாக பதிவேடு பராமரிக்கப்படும். மேற்படி புல எண்ணை பொறுத்து மேல்பத்து கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்கும் நத்தம் சிட்டா பதிவேட்டிற்கும், மண்ணச்சநல்லூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் நில அளவை பிரிவில் பராமரிக்கப்படும் நத்தம் அடங்கல் பதிவேட்டிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான்.

3) எதனால் மேற்படி வேறுபாடு உள்ளது என்றால் பட்டா மாறுதல் ஏதேனும் ஏற்பட்டால் அதனை பொறுத்து கிராம நிர்வாக அலுவலர் மட்டுமே தனது பதிவேட்டில் பதிவுகளை மாற்றுவார், ஆனால் நில அளவை பிரிவில் மாற்றம் செய்யப்படுவதில்லை.

4) மேல்பத்து கிராமம் புல எண்.224/2 ற்கான அ பதிவேட்டில் என்ன பதிவு உள்ளது என்றால் புல எண்.224/1– அரசு புறம்போக்கு– 0.36.0 ஹெக்டேர்–ஆதிதிராவிடர் நத்தம் நெய்வேலி, 1995 ல் நத்தம் நிலவரி திட்டத்தின் போது மேற்படி புல எண்.224/1 முழுவதுமாக நத்தத்திற்கு மாற்றப்பட்டு அதில் குடியிருப்பவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. **மேல்பத்து கிராமம் புல எண்.224/2 ற்கான அ பதிவேட்டின் உண்மை நகல் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5) மேற்படி புல எண்.224/1 முழுவதுமாக நத்தத்திற்கு மாற்றப்பட்ட பிறகு வா.சா.ஆ.1 பட்டாவானது 113 சதுரமீட்டருக்கு வையாபுரி மனைவி அங்கம்மாள் பெயருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்பிறகு மேற்படி பட்டாவில் மணவாளன் பெயரும் சேர்க்கப்பட்டு எப்போது கூட்டுப்பட்டாவாக மாற்றப்பட்டுள்ளது என்றால் D.K.20/1999–

நாள்.13.04.1999 உத்தரவின் படி மாற்றப்பட்டுள்ளது. புல எண்.224/1 எப்போது நத்தமாக மாற்றப்பட்டது என்றால் 1995 ல், தேதி தெளிவாக தெரியவில்லை. மணவாளன் பெயருக்கு மாற்றப்பட்ட D.K.20/1999–நாள்.13.04.1999 உத்தரவின் நகல் உள்ளதா என்றால் முன்னதாக எங்களது அலுவலக கோப்பில் தேடி கிடைக்கவில்லை.

6) எந்த ஆவணத்தின் அடிப்படையில் மணவாளன் பெயருக்கு கூட்டுப்பட்டாவாக மாற்றப்பட்டது என்று தெரியுமா என்றால் ஆவணம் தெரியாது, ஆனால் உத்தரவு மட்டும் தெரியும். பொதுவாக ஆவணங்களின் அடிப்படையிலேயே பட்டா பெயர் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி D.K.20/1999–நாள்.13.04.1999 உத்தரவு நடைமுறைகளுக்கான கோப்பு உள்ளதா என்றால் இல்லை.

7) 113 சதுரமீட்டர் வையாபுரி மனைவி அங்கம்மாளின் அனுபவத்தில் இருந்ததால் தான் அவரது பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆவணங்கள் எதுவும் இன்றி பட்டாவில் பெயரை சேர்க்க கோரினால் முன்னதாக உள்ள பட்டாதாரருக்கு அறிவிப்பு அனுப்படும் என்றால் பொதுவாக ஆவணங்கள் இன்றி பட்டாவில் பெயர் சேர்க்கப்படுவதில்லை. மேற்படி D.K.20/1999–நாள்.13.04.1999 உத்தரவை பிறப்பித்தது யார் என்றால் தெரியாது.

8) கிராம நிர்வாக அலுவலர் பராமரிக்கும் நத்தம் சிட்டா, அடங்கல் பதிவேடுகளில் மோசடியாக மேற்படி D.K.20/1999–நாள்.13.04.1999 உத்தரவு பதியப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) எனக்கு நீதிமன்றத்திலிருந்து வந்த அழைப்பாணையின் பேரிலேயே நான் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சொத்தின் புல எண்.224/2 என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு பட்டா கோரி 2ம் பிரதிவாதி மணவாளன் விண்ணப்பத்தின் (விண்ணப்ப எண்.20/1999) பேரிலேயே அவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான் 13.04.1999 ல் பட்டா எண்.1352 புல எண்.224/2 ல் 113 சதுர மீட்டரில் 2ம் பிரதிவாதி மணவாளன் பெயரை பட்டாவில் கூட்டாக சேர்க்கக்கோரி மண்ணச்சநல்லூர் துணை வட்டாட்சியர் மேல்பத்து கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய உத்தரவு என்றால் சரிதான்.

2) **13.04.1999 ல் பட்டா எண்.1352 புல எண்.224/2 ல் 113 சதுர மீட்டரில் 2ம் பிரதிவாதி மணவாளன் பெயரை பட்டாவில் கூட்டாக சேர்க்கக்கோரி மண்ணச்சநல்லூர் துணை வட்டாட்சியர் மேல்பத்து கிராம நிர்வாக அலுவலருக்கு அனுப்பிய D.K.20/1999–உத்தரவு அசல் பி.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான், 13.04.1999 தேதியில் தாவா புல எண்.224/2 ற்கு மண்ணச்சநல்லூர் மண்டல துணை வட்டாட்சியர் அங்கம்மாள் மற்றும் 2ம் பிரதிவாதிக்கு பெயருக்கு வழங்கிய பட்டா என்றால் சரிதான். **13.04.1999 தேதியில் மேல்பத்து கிராமம், புல எண்.224/2 ற்கு மண்ணச்சநல்லூர் மண்டல துணை வட்டாட்சியர் வழங்கிய பட்டா (பட்டா எண்.1352) அசல் பி.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான், 06.07.2025 தேதியில் அச்சிடப்பட்ட தாவா புல எண்.224/2 ற்கு 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி கூட்டுப்பட்டா என்றால் சரிதான். **06.07.2025 தேதியில் அச்சிடப்பட்ட மேல்பத்து கிராமம், புல எண்.224/2 ற்கு 2 ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி கூட்டுப்பட்டா எண்.1352 அசல் பி.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5)** என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான், 30.10.1991 ல் தயாரிக்கப்பட்ட மேல்பத்து கிராமம், புல எண்.224 ற்கான புல வரைபடத்தில் உண்மை நகல் என்றால் சரிதான். **30.10.1991 ல் தயாரிக்கப்பட்ட மேல்பத்து கிராமம், புல எண்.224 ற்கான புல வரைபடத்தில் உண்மை நகல் பி.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6) என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தான், இவ்வழக்கு 4 ம் பிரதிவாதி மனோஜான் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், செய்த மனுவில் பெயரில் மண்ணச்சநல்லூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் பொது தகவல் அலுவலர் 30.04.2019 தேதியில் தாவா புல எண்ணின் நான்கெல்லையை பொறுத்து வழங்கிய மேலெழுத்து என்றால் சரிதான்.

7) **4 ம் பிரதிவாதி மனோஜான் என்பவர் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், செய்த மனுவில் பெயரில் மண்ணச்சநல்லூர் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் பொது தகவல் அலுவலர் 30.04.2019 தேதியில் வழங்கிய மேலெழுத்து (மூ.மு.ஆ 2/RTI/1685/2019) அசல் பி.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

8) தாவா புல எண்.224/2 நாளது தேதி வரை கூட்டுப்பட்டாவாகவே உள்ளது என்றாலும், எந்த பதிவும் ரத்து செய்யப்படவில்லை என்றாலும் சரிதான். நத்தம் நிலத்தை பொறுத்த பதிவேடுகளை கிராம நிர்வாக அலுவலர் தான் பராமரித்து வருவார் என்றால் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவை பிரிவில் பதிவேடுகளை பராமரிப்பர். நில அளவையர் பராமரிக்கும் பதிவேட்டில் நிலங்களை பொறுத்து உட்பிரிவு செய்யப்படும்போது பதிவு செய்வார் என்றால் சரிதான்.

ஒப்பம்/– ப. கோபாலஅரசி,

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி.
இலால்குடி.

/உண்மை நகல்/

P GOPALA ARASI

Digitally signed by P GOPALA ARASI

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.